முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1200

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.01.2023**, புதன்கிழமை

1. பிரணவக்குடில் படைத்த குருராஜனே
   பிரணவ நாதம் ஒலிக்க பேருலகமெங்கும்
   சரவணச்சுடரேற்றி உயர் வழிபாட்டை
   சகலருக்கும் ஞானமாக அருளுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருள்ஞான வழிகாட்டி இனிதே சுபகிருது சிலை திங்கள்
   **(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 27 ம் நாள் 11.01.2023**, புதன்கிழமை**)**
   பொருள்பட ஞான அறிவுரை ஆசி
   புகலுவேன் அரங்கன் புகழ் உலகமெல்லாம் ஓங்க
3. ஓங்கவே ஓங்காரக்குடில் நோக்கி
   உலகோர் ஒன்றிணைந்து வந்து சேர்ந்து
   ஓங்கார ஞான உலகம் படைக்க
   ஓங்காரன் யான் அரங்கனுக்கு நித்தம் நித்தம்
4. நித்தம் நித்தம் சர்வபலம் கூட்டி
   நிலவுலகை ஞானலோகமாக்க
   உத்தமமாய் பேரருள் புரிந்து வர
   உலகோர் இந்த உண்மை அறிந்து
5. அறிந்துமே அரங்கனை நோக்கி வந்து
   அனுதினம் அரங்கன் பேரில் நாமஜெபங்கள்
   ஜெபதபங்கள் ஞானமாக தொடர்ந்து செய்து வர
   செப்பிடுவேன் சித்திகள் பெருக நேரும்
6. ஐயமற அரங்கன் திருவடி பற்றி
   அறிவிப்பேன் உயர் தீட்சை பெற்று நன்கு
   பெற்றுமே தீட்சை வழி செயல்பாடுகளை
   பிசகின்றி உண்மைபட தர்ம சேவையாக
7. ஆகவே உலகமெங்கும் கொண்டு செல்ல
   அரங்கன் புகழ்வழி இந்த உலகமே
   வரங்களாக மாறி மக்களுக்கு ஞான பலம்
   வல்லமையாகக் கிட்டி இந்த உலகமெல்லாம்
8. உலகமெல்லாம் அரங்கன் வழி ஆறுமுகன் யான்
   உண்மை ஞான வழி நடத்தி உலகோர்க்கு
   தந்தருள்வேன் முழுமை என்கின்ற மகா சக்தியை
   தரணிகாக்கும் வண்ணம் வரமாக வழங்கி
9. வழங்கியே உலகோர் அனைவருக்கும்
   வள்ளல் அரங்கன் வழி ஞானிகளாகும் வாய்ப்பும்
   பெருமைபட வருமுலகில் தந்தருள்வேன்
   பேருலகோர் இணங்கி சுத்த சன்மார்க்க நெறி

10. நெறி ஏற்று அரங்கன் தர்ம நெறியையும்
நிலவுலகில் பாதுகாத்து வழி நடத்த
வழிநடத்த உலகுக்கு மாற்றம் தானும் வல்லமைபட சடுதி வழிகாட்டலாக
அழியாமை பெற்ற அரங்கன் மூலம் நடந்தேறும் ஆறுமுகன் யான் இந்த அற்புதத்தை நடத்தி அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–